மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மழலையர் சொல்வளம் பெருக்கும் மரபு கவிதைகள்

# Classical Poems that Enhance Children's Vocabulary

இஷாந்தினி தமிழரசன்/ Hishanthini Thamilarasan[1]
சர்வேந்திரன் சந்தர்/ Sarveinthirran Chandar[2]
மலர்விழி சின்னையா/ Malarvizhi Sinayah[3]

[1&2]Undergraduate Student, Faculty of Languages and Linguistics, Universiti Malaya, Malaysia
[3]Senior Lecturer, Faculty of Languages and Linguistics, Universiti Malaya, Malaysia
Corresponding Email: hishathamil@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மழலையர் பொதுவாக, பலமுறை கேட்டு அறிந்த சொற்களையே பேசுவர். உச்சரிக்கச் சுலபமான சொற்களையே மழலையர் கற்க முயல்வதால், இத்தகைய சொற்களே அவர்களின் பேச்சில் இடம்பெறக் காணலாம். குறிப்பாக, மழலையரின் மொழி வளர்ச்சி, மழலையர் பாடல்களின் (rhymes) வழி அதாவது பேச்சு ஒலிப்புகளில் இரட்டிப்புச் சொற்களைப் பயன்படுத்தும் பொழுது வளர்ச்சியடைகிறது (Andrews & Baker, 2019). அவ்வகையில், மரபு கவிதை அதாவது யாப்பிலக்கணத்தோடு அமையப்பெறும் கவிதைகள் மழலையரின் சொல்வளத்தைப் பெருக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன எனலாம். எனவே, மரபு கவிதை வடிவில் அமைந்த மழலையர் பாடல்களில் எத்தகைய சொல்லாட்சி இடம்பெற்றுள்ளன என்பதை அறிவது அவசியமாகும். ஆகவே, இக்கட்டுரை மழலையரின் சொல்வளம் பெருக்கும் மரபு கவிதைகள் எனும் தலைப்பில் படைக்கப்படுகிறது. மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள, சொல்வளத்தைப் பெருக்கக்கூடிய கூறுகளை அடையாளம் காணுதலும், அவற்றை விவரித்தலும் இக்கட்டுரையின் நோக்கங்கள் ஆகும். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் 'சிரிக்கும் பூக்கள்' எனும் மரபு கவிதை நூல் இக்கட்டுரையின் தரவுமூலமாகும். ஆழ் செயல்முறைக் கோட்பாட்டின் (processing depth theory) துணையுடன், பண்புசார் முறைமையில் இவ்வாய்வின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மழலையர் புரிந்துகொள்ளும் வகையில், எளிய சொற்களையும் மழலையரின் சொல்வளத்தைப் பெருக்கும் உத்திகளையும் பயன்படுத்தி, இக்காலப் படைப்பாளர்களும் மழலையருக்குரிய மரபுக் கவிதைகளைப் படைத்திட இக்கட்டுரை துணைசெய்யும்.

**கருச்சொற்கள்:** அழ. வள்ளியப்பா, ஆழ் செயல்முறை, சொல்வளம், மரபுக் கவிதைகள், மழலையர்

**Abstract**

Children generally speak the words they have learned by listening repeatedly. As children learn to speak easily pronounceable words, these words can be observed in their speech. Specifically, children's language development occurs through the use of repetitive words in nursery rhymes, which contributes to the growth of their language skills (Andrews & Baker, 2019). As such, classical poems that are composed in accordance with poetic grammar have a significant role in enriching children's vocabulary. Therefore, it is essential to understand the word choice found in nursery rhymes that are structured in the form of classical poems. So, this paper is presented with the title "Classical Poems that Enhance Children's Vocabulary". Identifying and describing the vocabulary-enhancing elements found in classical poems are the aims of this paper. The collection of poems titled "Sirikkum Puukkal" (Smiling Flowers) by the child poet Azha. Valliyappa serves as the data source for this article. The data of this study was analysed based on the Processing Depth Theory. This article will help contemporary authors to create rhymes for children in the form of classical poems, by using simple words that children can understand and also strategies to increase their vocabulary.

**Keywords:** Azha. Valliyappa, Processing Depth Theory, Vocabullary, Classical Poems, Children

**முன்னுரை**

மழலையர் பெரும்பாலும் சிறு வயதிலிருந்து கவனிக்கும், தம் பெற்றோர்களின் செய்கைகளைப் பின்பற்றுகின்றனர். குறிப்பாக, தங்களிடம் தொடர்புகொள்ளும் பெற்றோர்களின் சொற்களையும் முகப்பாவனைகளையும் கவனிக்கும் மழலையர், அவ்வப்போது அவற்றைப் பின்பற்றவும் முனைகிறார்கள். மழலையர் பொதுவாக, பலமுறை கேட்டு அறிந்த சொற்களையே பேசுவர். உச்சரிக்கச் சுலபமான சொற்களையே மழலையர் கற்க முயல்வதால், இத்தகைய சொற்களே அவர்களின் பேச்சில் இடம்பெறக் காணலாம்.

மழலையின் சொல்வளம் என்பது, சராசரியாகப் பதினைந்து மாதங்களில் பத்து சொற்களையும், பதினெட்டு அல்லது பத்தொன்பது மாதங்களில் ஐம்பது சொற்களையும் கொண்டிருக்கும் (Hauser, Chomsky & Fitch, 2002). குறிப்பாக, மழலையரின் மொழி வளர்ச்சி, மழலையர் பாடல்களின் (rhymes) வழி அதாவது இரட்டிப்புச் சொற்களைப் பயன்படுத்தும் பொழுது வளர்ச்சியடைகிறது (Andrews & Baker, 2019). அவ்வகையில், மரபு கவிதை அதாவது யாப்புபிலக்கணத்தோடு அமையப்பெறும் கவிதைகள் மழலையரின் சொல்வளத்தைப் பெருக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன எனலாம். எனவே, மரபு கவிதை வடிவில் அமைந்த மழலையர் பாடல்களில் எத்தகைய சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது என்பதை அறிவது அவசியமாகும். ஆகவே, இக்கட்டுரை மழலையரின் சொல்வளம் பெருக்கும் மரபு கவிதைகள் எனும் தலைப்பில் படைக்கப்படுகிறது. மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள, சொல்வளத்தைப் பெருக்கக்கூடிய கூறுகளை அடையாளம் காணுதலும், அவற்றை விவரித்தலும் இக்கட்டுரையின் நோக்கங்கள் ஆகும்.

**ஆய்வுமுறைமை**

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் ‘சிரிக்கும் பூக்கள்’ எனும் மரபு கவிதை நூல் இக்கட்டுரையின் தரவுமூலமாகும். இந்நூலில், முதல் ஐந்து பகுதிகளில் 73 பாடல்கள், கதைப்பாடல்களில் 23 பாடல்கள், வேடிக்கைப் பாடல்களில் 11 பாடல்கள் என மொத்தம் 109 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. Craik, Lockhart (1972) இருவரும் அறிமுகப்படுத்திய ஆழ் செயல்முறைக் கோட்பாட்டின் (processing depth theory) துணையுடன், பண்புசார் முறைமையில் இவ்வாய்வின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

ஒரு மழலை எவ்வளவு அடுக்கமாகவும் தொடர்ந்தும் ஒரு செயலைச் செய்கின்றதோ அவ்வளவு எளிதாக அச்செயல் அம்மழலையின் நினைவில் பதிகின்றது (Nelson,1977). அது போலவே ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதாலும், வெவ்வேறு சூழலிலும் பொருளிலும் பயன்படுத்துவதாலும், அச்சொல் ஒரு மழலையின் நீண்ட கால நினைவில் (long-term memory) பதிந்து, நிலைபெற்று அம்மழலையின் சொல்வளமாக மாறும் வாய்ப்புள்ளது. இதனைத்தான் Craik, Lockhart (1972) ஆகியோரின் ஆழ் செயல்முறைக் கோட்பாடு (processing depth theory) வலியுறுத்துகிறது.

ஒரு சொல்லின் பொருண்மையைப் புரிந்துகொள்ளும் நோக்கில் அச்சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரித்து, ஆழ்நிலையில் அதனை நினைவில் பதியச் செய்யலாம் என்பதே ஆழ் செயல்முறைக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து. இக்கோட்பாடு, அமைப்பியல்

செயல்முறை (structural processing), ஒலியனியல் செயல்முறை (phonemic processing), பொருண்மையியல் செயல்முறை (sementic processing) எனும் மூன்று செயல்முறைகளை வலியுறுத்துகிறது (Craik & Lockhart, 1972). இவற்றுள் ஒலியனியல் செயல்முறை அடிப்படையில் மட்டுமே அழ. வள்ளியப்பாவின் கவிதைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஒலியனியல் செயல்முறை என்பது ஒலிப்புமுறை அடிப்படையில் ஒரு சொல்லை நினைவில் வைத்துகொள்வதாகும். ஒலிப்புமுறையில் ஒற்றுமையோ தொடர்போ உடைய சந்தச் சொற்கள், இணைமொழி, அடுக்குத்தொடர் போன்றவை இதில் அடங்கும்.

**மழலையர் சொல்வளம் பெருக்கும் அழ. வள்ளியப்பாவின் கவிதைகள்**

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடல்கள் அமைப்பாலும் கருப்பொருளாலும் மரபைப் பின்பற்றி அமைந்திருப்பதால், அவரை மரபு கவிஞரென ஏற்கலாம். அழ வள்ளியப்பாவின் பாடல்கள், குழந்தைகளுக்காக இயற்றப்பட்டவை என்பதால், அவை குழந்தைகளுக்கு எளிதில் புரியும் வழக்குச் சொற்களையும் அவர்கள் அன்றாட வாழ்வில் செய்யக்கூடிய அல்லது பார்க்கக் கூடிய செயல்களையோ செய்திகளையோ உள்ளடக்கியிருக்கும். மேலும், ஒரே சொல்லோ அல்லது ஓசை நயம் பெற்ற சந்தச் சொற்களோ இவரது பாடல்கலில் விரவிக் கிடக்கக் காணலாம். பக்க எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வில் சிரிக்கும் பூக்கள் கவிதைத் தொகுப்பின் முதல், மூன்று பகுதிகள் மட்டும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**சந்தச் சொற்கள்**

சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் அதாவது அல்லது ஒலிப்புமுறை ஒரே தாள அளவுக்குப் பொருந்த அமைவதே சந்தமாகும். இரண்டு சொற்களைச் சந்தச் சொற்கள் என்று கூற வேண்டும் என்றால் அவற்றின் எழுத்துகள் அதே வரிசையில் அளவாலும் ஓசையாலும் ஒத்திருத்தல் வேண்டும். பொதுவாக, சொற்களில் உள்ள உயிர்களும் உயிர் மெய்களும் குறிலுக்குக் குறில், நெடிலுக்கு நெடில் என்னும் முறையில் அமைந்திருக்கும். மெய்யெழுத்தாயின் ஒரே இனத்தைச் சேர்ந்தவையாக அதாவது வல்லினத்துக்கு வல்லினம், மெல்லினத்துக்கு மெல்லினம், இடையினத்துக்கு இடையினம் என அமையப் பெறும். மெய்யெழுத்தை அடுத்துவரும் உயிர்மெய் எழுத்துகள் இரு சொற்களிலும் ஒரே இனமாக அமைதல் சந்தச் சொல்லுக்கு அவசியம் (நெடுமாறன், 2015). இக்கட்டுரையில் முதல் எழுத்து மாறி, தொடரும் எழுத்துகள் ஒன்றி வருவன சந்தச் சொற்களாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மூன்று பகுதிகளிலும் மொத்தம் 40 கவிதைகள் உள்ளன. அவற்றுள் 14 கவிதைகளில் முதல் எழுத்து மாறி வருவதாகவும் அடுத்து வருகின்ற எழுத்துகள் ஒன்றி வருவதாகவும் உள்ள சந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| தரவுக் குறியீடு | கவிதை |
|---|---|
| பகுதி 1, பாடல் 13, வரி 1-4 | **தங்கம், சிங்கம்** இரண்டும் அந்தத்<br>தாய்க்கு நல்ல பிள்ளை.<br>தாய்க்கு நல்ல பிள்ளை – இதில் |

| | |
|---|---|
| | சற்றும் ஐயம் இல்லை |
| பகுதி 2, பாடல் 17, வரி 2 - 4 | மலை மேலே ஏறி நீ<br>வருவாய் என்றே எண்ணினோம்.<br>மல்லி கைப்பூக் கொண்டுநீ<br>தருவாய் என்றும் பாடினோம். |
| பகுதி 3, பாடல் 30, வரி 2 - 4 | அன்னம் எனக்கே<br>ஊட்டிய கை.<br>அன்பாய்த் தொட்டில்<br>ஆட்டிய கை. |

தங்கமும் சிங்கமும் எனும் கவிதையில் தங்கம் த குறில்; ங் மெல்லினமெய்; க – குறில் (வல்லினம்); ம் -மெல்லினமெய் மற்றும் சிங்கம் சி குறில்; ங் மெல்லினமெய் ; க – குறில் (வல்லினம்); ம் -மெல்லினமெய் ஆகிய இரண்டு சொற்களிலும் மெல்லின மெய்க்குப் பின் வல்லின உயிர்மெய்யே வந்துள்ளது. ஒலிகள் மீண்டும் ஒரே தாள அளவில் வருவதால் இவ்வகையான சொற்களை மழலையர் சுலபமாகக் கற்கின்றனர் எனலாம். மழலையர் பேச்சைப் புரிந்துகொள்ளவும், பேசக் கற்றுக்கொள்ளவும் சந்த நயங்களையே சார்ந்திருக்கின்றனர் என்கிறார்கள் (Morgan & Demuth, 2014).

**இணைமொழி**

ஒரு கருத்தைத் தெளிவாக முன்னிறுத்த, இரு வேறுபட்ட சொற்கள் ஒன்று சேர்ந்து வருதலே இணைமொழி எனப்படும். பொதுவாக இவ்விரு சொற்களும் ஓசை ஒன்றி இருக்கும். இணைமொழியின் வழி சொல்ல வேண்டிய கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தலாம். இவை பெரும்பாலும் ஒரு பொருள் குறித்தனவாயும் எதிர்ப்பொருள் உணர்த்துவனவாயும் அமையும். அதேபோல் ஒன்று மட்டும் பொருளுடையதாக அமைந்து ஒத்த ஓசை தரும் இணைமொழிகளும் காணப்படுகின்றன (நெடுமாறன், 2015). அழ. வள்ளியப்பா சிரிக்கும் பூக்கள் கவிதைத் தொகுப்பில் பகுதி ஒன்று, இரண்டு, மூன்றில் 12% இணைமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இணைமொழி மழலையரின் சொல்வளத்தைப் பெருக்கினாலும் அதனைப் புரிந்து கொள்ள சிரமம் ஏற்படலாம் என்பதனால் கவிஞர் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இதனைப் பயன்படுத்தியுள்ளார் எனலாம். ஆனால், இணைமொழியைக் கொண்டு பல சொற்களில் விளக்க வேண்டிய ஒரு பொருளை ஒரே சொற்றொடரில் விளக்குவதால், மழலையர் இவற்றை எளிதாகக் கற்றுக் கொள்கின்றனர்.

| தரவுக் குறியீடு | கவிதை |
|---|---|
| பகுதி 3, பாடல் 37, வரி 1- 4 | **கறுப்பு வெள்ளை** இரண்டு நிறமும்<br>கலந்திருக்கும் எங்கள் பசு.<br>காலை மாலை இரண்டு வேளை<br>பாலைத் தரும் எங்கள் பசு |
| பகுதி 1, பாடல் 16 , வரி 1 -3 | எழுதி வைத்த தாள்களை<br>இங்கும் அங்கும் இறைத்தவன்<br>யார், யார், யார் ? |

| | |
|---|---|
| பகுதி 2, பாடல் 25 , வரி 1 -4 | கோட்டை முன்னால் கம்பம் ஒன்றில்<br>கொடி பறக்குது<br>கூவம் ஆறு குறுக்கும் நெடுக்கும்<br>வளைந்து செல்லுது |

கறுப்பு வெள்ளை எனும் கவிதையில் கறுப்பு வெள்ளை, காலை மாலை ஆகிய இணைமொழிகள் காணப்படுகின்றன. மழலையர் தங்கள் உரையாடலிலும் வாக்கியங்களிலும் இணைமொழிகளைப் பயன்படுத்த இத்தகைய மரபு கவிதைகள் துணைபுரிகின்றன. இதனால், மழலையர் தங்களின் சொல் வளத்தை விரிவுப்படுத்துவதோடு கற்ற சொற்களைச் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்தவும் முற்படுகின்றனர்.

### அடுக்குத் தொடர்

ஒரு பொருளைத் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் பயன்படுத்தப்படுவது அடுக்குத்தொடராகும். ஒரு சொல் அடுக்கி அடுக்கி வந்தாலும் தனித் தனிச் சொல்லாகப் பிரிந்து வந்தாலும் பொருள் தருமாயின் அஃது அடுக்குத்தொடர் எனப்படும். அடுக்குத்தொடரில் உவகை, வெகுளி, அச்சம், விரைவு, அவலம், அசைநிலை முதலான பொருள்களை உணர்த்தலாம் (நெடுமாறன், 2015).

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்
இரண்டு மூன்று நான்கு எல்லைமுறை அடுக்கும்
(நன்னூல்:395)

அசைநிலை, பொருள் நிலை, இசைநிலை ஆகிய அடுக்குத் தொடர்களுக்கு ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு வரையில் சொற்கள் அடுக்கிக்கொண்டே வந்தால் அஃது அடுக்குத் தொடராகும் என நன்னூலில் கூறப்பட்டுள்ளது. அழ. வள்ளியப்பா மரபு கவிதைத் தொகுப்பின் முதல் மூன்று பகுதிகளில், மொத்தம் 17 கவிதைகளில் அடுக்குத் தொடரின் பயன்பாடு கண்டறியப்பட்டது.

| தரவுக் குறியீடு | கவிதை |
|---|---|
| பகுதி 1, பாடல் 1 , வரி 1-4 | சின்னச்சின்னக் குழந்தையம்மா<br>எங்கள் பாலமுருகன்-புன்<br>சிரிப்புக்காட்டி மயக்கிடுவான்<br>எங்கள் பாலமுருகன் |
| பகுதி 2, பாடல் 19 , வரி 1 -4 | கையில் எடுத்து<br>வாயில் வைத்துக்<br>கடிக்கக் கடிக்க<br>இனிக்கும் பழம். |
| பகுதி 3, பாடல் 34 , வரி 1 -4 | எண்ணம், வாக்கு, செய்கையிலே<br>இனிமை இருந்தால் வாழ்க்கையிலே,<br>இன்பம், இன்பம், இன்பம்தான்.<br>இல்லா விட்டால் துன்பம்தான் ! |

சுட்டப்பட்டுள்ள கவிதை வரிகளில் சொற்கள் தொடர்ந்து அடுக்கிகொண்டு வருகிறன்றன. பொதுவாக, ஒரு செயலை மறுபடி மறுபடி செய்தால், அது மழலையரின் மனத்தில் ஆழமாகப் பதியும். அதுபோலவே, ஒரு சொல்லையோ சொற்றொடரையோ மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டோ கேட்டுக்கொண்டோ இருந்தால், அச்சொல் சுலபமாகக் மழலையரின் மனத்தில் பதிவதோடு, அவர்கள் நிறைய சொற்களையும் கற்பர் (Barletta, Blamberger, Brosius, Buchholz, Haselstein & Warstat, 2019).

**ஓசை நயம்**

குழந்தைக் கவிதைகள் குறிப்பாக, அழ. வள்ளியப்பாவின் 'சிரிக்கும் பூக்கள்' கவிதைத் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் ஓசைநயத்தையும் பொருளையும் முதன்மையாகக்கொண்டு இயற்றப்பட்டுள்ளன. பொதுவாக மரபுக் கவிதைகள் இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டவையாகும். சொற்களில் ஓசை ஒழுங்கில் வைத்துக் கட்டுவதையே யாப்பு என்போம். தாளம், ஓசை நயம் என்பதெல்லாம் யாப்பில் அடங்கும் (நெடுமாறன், 2015).

| தரவுக் குறியீடு | கவிதை |
|---|---|
| பகுதி 1, பாடல் 10, வரி 1-4 | **அண்ணாமலை அண்ணாமலை**<br>என்ன சொன்னானாம்?<br>ஆனை முதுகில் ஏறிச்செல்ல<br>ஆசை என்றானாம்! |
| பகுதி 2, பாடல் 20 , வரி 1 -4 | பென்சில் சீவ உதவிடும்<br>பெரிய பழத்தை நறுக்கிடும்<br>மரத்துப் பட்டை சீவிடும்<br>வாழை இலையை அறுத்திடும் |
| பகுதி 3, பாடல் 33 , வரி 1 -4 | தாய்சொல்லித் தந்த மொழி.<br>தாலாட்டில் கேட்ட மொழி.<br>சந்திரனை அழைத்த மொழி.<br>சாய்ந்தாடிக் கற்ற மொழி. |

என்ற அழ. வள்ளியப்பாவின் 'அண்ணாமலையின் ஆசை' எனும் கவிதை மழலையரை எளிதில் கவரும் தன்மை உடையதாக உள்ளது. Lawson-Adams, Dickinson, Donner (2022) ஆகியோரின் கருத்துப்படி, மழலையர் படத்தின் வழி மட்டும் இல்லாமல், ஓசைநயம் கொண்ட பாடல்களின் வழியேயும் மனத்தில் பதியும் வகையில் கற்கின்றனர். அவ்வகையில் அழ. வள்ளியப்பாவின் இக்கவிதைத் தொகுப்பில் பகுப்பாய்வு செய்த 40 கவிதைகளுமே ஓசை நயத்தைக் கொண்டு அமையப்பெற்றுள்ளன. சொல்வளத்தைப் பெருக்க மழலையர்களுக்கு உகந்த வழி ஓசை நயமாகும். ஓசையோடும் நயத்தோடும் கற்கப்படும் செயல்கள் மழலையரின் மனத்தில் ஆழமாகப் பதியும் என்பதை உணர்ந்து அழ வள்ளியப்பா சிரிக்கும் பூக்கள் கவிதைத் தொகுப்பில் உள்ள அனைத்து கவிதைகளையும் ஓசை நயத்தோடு எழுதியுள்ளார் என்பது புலப்படுகிறது.

## நிறைவுரை

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் 'சிரிக்கும் பூக்கள்' எனும் மரபு கவிதைத் தொகுப்பு நூலில் மழலையர் சொல்வளம் பெருக்கும் கூறுகளுடன் அமைந்த கவிதகளைக் காண முடிகின்றது. சந்தம், இணைமொழி, அடுக்குத் தொடர், ஓசை நயம் ஆகிய கூறுகளைக் கொண்டு கவிஞர் அழ. வள்ளியப்பா, மழலையருக்கு ஏற்ற பாடல்களை மரபைப் பின்பற்றி இயற்றியுள்ளார். குழந்தைகளுக்காக எழுதியதால், தம் கவிப் புலமையை அடக்கி, குழந்தையாகவே மாறி, குழந்தைகளின் இயல்புகளை உணர்ந்து அவர்கள் இரசிக்கும்படியான கவிதைகளை அவர் படைத்துள்ளார். அவர் கவிதைகளில் சொற்கள் எளிதாக இருப்பதோடு, அவை தொடர்ந்து பல முறை ஒரே வடிவில் வருவதால், குழந்தைகள் தங்களின் ஆழ் மனத்தில் அவற்றைச் சுலபமாகப் பதிய வைப்பதோடு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அதிகமான சொற்களைக் கற்கின்றனர்.

## துணைநூற்பட்டியல்


Andrews, J. F., & Baker, S. (2019). ASL Nursery Rhymes. Sign Language Studies, 20(1), 5-40.

Barletta, V., Blamberger, G., Brosius, C., Buchholz, M. B., Gil, I. C., Haselstein, U., ... & Warstat, M. (2019). Repetition, recurrence, returns: how cultural renewal works. Rowman & Littlefield.

Craik, F. I., & Lockhart, R. S. (1972). Levels of processing: A framework for memory research. Journal of verbal learning and verbal behavior, 11(6), 671-684.

Hauser, M. D., Chomsky, N., Fitch, W. T. (2002). The faculty of language: What it is, who has it, and how did it evolve? Science, 298, 1569-1579.

Lawson-Adams, J., Dickinson, D. K., & Donner, J. K. (2022). Sing it or speak it? The effects of sung and rhythmically spoken songs on preschool children's word learning. Early Childhood Research Quarterly, 58, 87-102.

Morgan, J. L. and Demuth, K. (2014). Signal to syntax: Bootstrapping from speech to grammar in early acquisition. Psychology Press.

Mundorf, A. M., Uitvlugt, M. G., & Healey, M. K. (2022). Does depth of processing affect temporal contiguity? Psychonomic Bulletin & Review, 1-11.

Nelson, T. O. (1977). Repetition and depth of processing. Journal of verbal learning and verbal Behavior, 16(2), 151-171.

Song, Y. (2020). Simile and Metaphor Interpretation in Children. English Language Teaching, 13(4), 91-103.

அழ. வள்ளியப்பா. (1991). சிரிக்கும் பூக்கள் (Vol. 2). மட்ராஸ்: குழந்தை புத்தக நிலையம்.

முரசு. நெடுமாறன். (2015). கவிதைத் தொகுப்பு. உமா பதிப்பகம்.